IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.293/2009
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.35p.m.

பி.வா.சா.1 சாட்சி பாஸ்கரசேதுபதி த.பெ.இராமச்சந்திரன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 23.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. உரப்பனூர் கிராமத்தில் நாளது தேதி வரை விவசாயம் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். உரப்பனூர் பெரியகண்மாயிலிருந்துதான் பாசன வசதி என்றால் சரிதான். சர்வே எண் 117 வடக்கம்பட்டி கிராமத்தில் சமதள பகுதியாக உள்ளது, அதை சீர்செய்தால் மட்டுமே உரப்பனூர் பெரியகண்மாய்க்கு நீர்ஆதாரம் அமையும் என்று எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல.

2. 25 ஆண்டுகளுக்கு மேலாக சர்வே எண் 117 ஆனது சமதளபகுதியாக உள்ளது என்றால் சரியல்ல, 50 ஆண்டுகளுக்கு மேலாக சமதளபகுதியாக உள்ளது. மேற்படி 50 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்படி சர்வே எண் 117ன் அமைப்பானது எவ்வாறு இருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வடக்கம்பட்டியில் உள்ள தென்வடல் ஓடையின் தொடர்ச்சி வடபுறமாக உள்ள பொன்னமங்கலம் ஓடைக்கு தொடர்பில்லாத அமைப்பில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பொன்னமலங்கலம் கண்மாய் நிரம்பி மேலேந்தல் கண்மாயிலிருந்து மேற்கு பக்க மறுகால் வழியாக உரப்பனூர்

கண்மாய்க்கு நீர்செல்கிறது என்ற அமைப்பாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 3. பொன்னமங்கலம் கண்மாய் கிழக்கு மறுகால் வழியாக நீர் வெளியேறி மொச்சிக்குளம் கண்மாய், ஜோசியர் ஆலங்குளம் கண்மாய் நிரம்பி உரப்பனூர் கண்மாய்க்கு நீர் செல்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாளது தேதி வரை அரசாங்கம் வாதிகளின் சட்டப்படியான நீர் உரிமையை மறுக்கும் விதமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. அரசாங்கம் வாதிகளின் உரிமை சம்மந்தமாக எவ்வித இடையூறும் செய்யாததால் அரசினை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்பது இவ்வழக்கிற்கு மேற்படி அரசு தேவையற்ற தரப்பினராக இருப்பதால் வாதிகள் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளாகிய நாங்களும், கிராமத்து ஆயக்கட்டுதாரர்களில் சிலர் மட்டுமே சர்வே எண் 117ல் ஒரு பிரிவு கால்வாய் உள்ளது என்றும், அதனை சட்டப்படியாக ஏற்படுத்திவிடவேண்டும் என்று தொடர்ந்து உபகால்வாய் ஏற்படுத்த முயற்சி செய்தோம் என்றும், மேலும் கடந்த 26.6.2009 அன்று உபகால்வாய் எப்படியாவது ஏற்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வந்ததால் பிரதிவாதிகளாகிய எங்கள் மீதும், பெரியகண்மாய் ஆயக்கட்டுதாரர்களின் பிரதிநிதித்துவக்காரர்கள் என்ற அடிப்படையில் எங்கள் மீது வாதிகள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

5. மேலஉரப்பனூர் கிராம மக்கள் ஆகிய பெரியகண்மாயின் ஆயக்கட்டுதாரர்கள் மட்டுமே பிரதான கால்வாயிலிருந்து உபகால்வாய் இருப்பது போன்று பிரஸ்தாபித்து கால்வாயினை ஏற்படுத்த முயற்சித்ததால்

எங்கள் மீது மட்டும் இவ்வழக்கினை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதான கால்வாயிலிருந்து நெடுங்காலமாக பொன்னமங்கலம் கண்மாய்க்கு சர்வே எண் 117 கருமாத்தூாரை ஒட்டி அமைந்துள்ள கால்வாயிலிருந்து பொன்னமங்கலம் கண்மாய்க்கு செல்கிறது என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மேற்படி பொன்னமங்கலம் கண்மாயின் **வரைபடம் மற்றும் அ– பதிவேடு என்றால் சரிதான். மேற்படி வரைபடம் வா.சா.ஆ.16 ஆகவும், அ–பதிவேடு வா.சா.ஆ.17 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வடக்கம்பட்டி கிராமத்தில் சர்வே எண் 92 வழியாக செல்கிறது சம்மந்தமாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. நான் ஊராட்சி மன்றத் தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி சட்டப்புறம்பாக பிரதான கால்வாயிலிருந்து எப்படியேனும் உபகால்வாய் ஏற்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் வருவாய் ஆவணங்களை செல்வாக்கினை வைத்து திருத்தி அதில் உபகால்வாய் உள்ளதுபோல் நீரினை மேலஉரப்பனூர் கண்மாய்க்கு சட்டப்புறம்பாக கொண்டுசெல்ல முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

8. சர்வே எண் 117 ஆனது உரப்பனூர் கண்மாயிலிருந்து 12 கி.மீ உள்ளது என்றால் சரிதான். மேலே கூறப்படும் கால்வாயனது கருமாத்தூருக்கு வடக்கிலிருந்து நெடுகிலும் இயற்கையாக அமையப்பெற்ற கால்வாய் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் அரசு நிர்வாகம் நடவடிக்கை எடுத்துவருகிறது என்று

கூறியபோதும் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

9. வாதிகளின் கண்மாய்க்கு வரும் நீர்வரத்தானது அவர்களின் தொடர் உரிமையாகவும், வசதி உரிமையாகவும் உள்ளதால் அதனை இடையூறு செய்ததால்தான் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி நெடிய மற்றும் வசதி உரிமைச் சட்டத்தின்படி பிராது அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

10. மேலே குறிப்பிட்டுள்ள உரிமைகள் உரிமையியல் நடைமுறைக்கு உகந்ததால்தான் இந்நீதிமன்றத்தில் தங்களது உரிமையை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.10p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.24 10:06:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.